**16.09.2019 அ.வ.எண். 148/2008 வா.த.சா. 2 குமார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எனது மனைவிக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் அடிப்படையில் எனது மனைவி பெயருக்கு நகராட்சியால் பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது மனைவியின் பெயருக்கு பட்டா வழங்கப்படுவதற்கு முன்பாக தாவா சொத்து சம்மந்தமாக எனது தாத்தா பெயரில் பட்டா இருந்தது என்று சொன்னால் சரிதான். எனது மனைவியின் பெயரில் பட்டா மறுதல் செய்வதற்கு முன்பாக தாவா சொத்து சம்மந்தமான பட்டா 3 ம் பிரதிவாதி சதீஷ் என்பவர் பெயரில் இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எந்த வகையான நிலம் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து புஞ்சை நிலம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து விவரத்தில் தாவா சொத்து புஞ்சை நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக வருவாய் துறையினரால் பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் சதீஷ் என்பவர் பெயரில் பெறப்படுகிறது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை எனது மனைவி 2008ம் வருடம் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அ.வ.எண். 203/2008ல் 3ம் பிரதிவாதி சதீஷ் தாவா சொத்து சம்மந்தமான அவரது பெயரில் உள்ள பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக எனது பெயரிலும், எனது தகப்பனார் பெயரிலும் வருவாய்துறை ஆவணங்கள் ஏதும் இருந்ததில்லை என்று சொன்னால் சரிதான். எனது தாத்தாவின் பெயரில் தான் இருந்து வந்தது. எனது தாத்தாவின் பெயரில் நகராட்சியால் வழங்கப்பட்ட பட்டா இருந்து வந்தது. எனது தாத்தா பெயரில் வழங்கப்பட்ட பட்டா ஏதும் என்னிடம் இல்லை. வா.த.சா.ஆ3ல் எனது மனைவி தாக்கல் செய்துள்ள நகராட்சி விவரங்களில் நிலத்தின் வகைபாடு ஏதும் குறிப்பிடப்படவில்லை என்ற சொன்னால் எனக்கு தெரியாது. எனக்கு படிக்கதெரியாது. குறிப்பாக தாவா சொத்து சம்மந்தமாக எனது மனைவியின் பெயரில் எப்போது பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்று கேட்டால் 2006ம் வருடம் அவ்வாறு பட்டா மாறுதல் செய்யப்பட்டது. வா.த.சாஆ3ல் உள்ள நிலப்பதிவேட்டு நகல் 2007ம் வருடம் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து இந்நாள் வரை காலிமனையாக இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். 1983ம் வருடம் தாவா சொத்தை எனது தாத்தா சங்கரன் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றும், எனவே எனது தாத்தாவிற்கு தாவா சொத்தின் மீது எந்த உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தின் மீது எனது தாத்தாவிற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், எனது தாத்தா தாவா சொத்துக்களை 1983ம் வருடமே விற்பனை செய்துவிட்டதால், தாவா சொத்தின் மீது எனது தகபனாருக்கும், எனக்கும் எந்த உரிமையும் இல்லை என்றும், உரிமையில்லாத தாவா சொத்து சம்மந்தமாக நான் எனது மனைவிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்துள்ளேன் என்றும், அது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா சங்கரன் என்பவருக்கு கிரையம் கொடுத்த பிறகு அதை அவர் அனுபவித்து வந்தார் என்றும், 1989ம் வருடம் சங்கரன் என்பவரிடம் நான் சென்று பிரச்சனை செய்தேன் என்றும், சங்கரன் என்பவர்

பஞ்சாயத்தார் துணையுடன் என்னை தடுத்து நிறுத்தினார்கள் என்றும், மேலும் பஞ்சாயத்து பேசிய சமயத்தில் எனது தாத்தா சங்கரன் என்பவரக்கு கிரையம் கொடுத்துவிட்டதால் அந்தத சொத்து சம்மந்தமாக நான் பிரச்சனை ஏதும் செய்யமாட்டேன் என் குறிப்பிட்டு 01.10.1989 அன்று சம்மத ரசீது என்று எழுதிகொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த சம்மத ரசீதில் சுசை தாஸ், அருள், கோபால் ஆகியோர் சாட்சியமாக கையொப்பமிட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1989ம் வருடம் தாவா சொத்தின் மீது உரிமை ஏதும் இல்லைஎன எழுதிகொடுத்தபிற்கு தாவா சொத்தை அபகரிக்கும எண்ணத்தில் நான் 2005ம் வருடம் எனது மனைவி பெயருக்கு தாவா சொத்து சம்மந்தமாக தவறான தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரீயல்ல. நான் உஎழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம' சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அந்த தாபன செட்டில்மெண்ட பத்டதிரத்தின் அடிப்படையில் எனது மனைவி உரிமை ஏதும் கோரமுடியாது என்றும், தவறான தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் நகராட்சியில் நில அளவு பதிவேட்டில் எனது மனைவியின் பெயர் தாவா சொத்து சம்மந்தமாக சேர்க்கப்பட்டது செல்லாது என்றும், அந்த ஆவணங்களின் அடிப்படையில் எனது மனைவி தாவா சொத்தின் மீது உரிமை ஏதும் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை எது தாத்தா சங்கரன் எனபவருக்க கிரையம் கொடுத்ததன் பேரில் அவர் அனுபவித்து வந்தார் என்றும், அதன் பின்பு 1999ம் வருடம் 2ம் பிரதிவாதி சங்கரன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்றும்,, அதன்பின்பு 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு 0.09.2004 அன்று தாவா சொத்து சம்மந்தமாக தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றும், அந்த தான செட்டில்மெண்ட் அடிப்படையில் 3ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா சங்கரன் என்பவருக்கு கிரையம் கொடுத்த பிறகு தாவா சொத்தில் நானும் எனது மனைவியும் இந்நாள் வரை அனுபவத்தில் இருந்ததில்லை என்றும், தாவா சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருவதாக பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனவே நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.